2. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள். (தொடர்ச்சி).

(ஈ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.